# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2022 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்*

---

*(2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2022, ஏப்பிறல் மாதம் 01 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2022 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்**

[2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.- ஓ. 51/2021

**2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 25இ என்னும் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 25இ என்னும் பிரிவைத் திருத்துதல்

(1) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "மற்றும் 2016, நவெம்பர் 1 ஆம் தேதியிலிருந்து தொடங்கும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்குப் பதினைந்து சதவீதமாதல் வேண்டும்;" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "மற்றும் 2016, நவம்பர் 1 ஆந்தேதியிலிருந்து தொடங்கும், ஆனால் 2021, திசெம்பர் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடையும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக் குப் பதினைந்து சதவீதமாதல் வேண்டும்;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(எ) 2022, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்கும் வரிவிதிக்கப் படற்பாலதான காலப்பகுதிக்கு பதினெட்டுச் சதவீதமாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்துக் கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்

3. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை அதன் பாகம் II இன் (அ) என்னும் பந்தியில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பந்தியின் (xxxi) ஆம் விடயத்தில், "2020, மே 20 ஆந் தேதியிலிருந்து" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2020, மே 20 ஆந் தேதியிலிருந்து தொடங்கி 2021, திசெம்பர் 31 ஆந்தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின் போது" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) (xxxi) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(xxxii) 2022, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதற்குப்பின்னர், சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் விதப்புரையின்மீது நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட, ஏதேனும் உலகம்பரவுநோயை அல்லது பொதுச் சுகாதார அவசரகால நிலைமையை எதிர்கொள்வதற்குச் சுகாதார சேவைகளை வழங்குவதற்காக ஓர் அரசாங்க வைத்தியசாலைக்கு அல்லது சுகாதார அமைச்சுக்கு நன்கொடையளிக்கப்பட்ட மருத்துவச் சாதனங்கள், எந்திரத்தொகுதி, உபகரணங்கள், துணைக்கருவிகளும் அவற்றின் பாகங்களும், வைத்திய சாலைத் தளபாடங்கள், அவுடதங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள்.";

செல்லுபடியாக்குதல்

**4**. இரண்டாயிரத்து இருபத்திரெண்டாம் ஆண்டு, சனவரி மாதம் 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்றதும், இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை புறக்குறிப்பிடப் படும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகச் சேர்பெறுமதி வரியைச் சேகரிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள் உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சேகரிப்பு செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் மற்றும் செய்யப்படுவதாகவும் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஆள், அத்தகைய சேகரிப்புத் தொடர்பில், எல்லாக் குடியியல் மற்றும் குற்றவியல் வழக்குகளுக்கெதிராகவும் இத்தால் நட்டோத்தரவாதமளிக்கப் படுகின்றார்:

ஆயின் சொல்லப்பட்ட காப்பகுதியின்போது இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகச் சேகரிக்கப்பட்ட ஏதேனும் வரி தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் முடிபை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளை மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள் பாதித்தலாகாது.

ஒரு தவணை தவறியவராகக் கருதப்படுதலாகாது

**5**. இரண்டாயிரத்து இருபத்திரெண்டாம் ஆண்டு சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைகின்றதுமான ஏதேனும் காலப்பகுதிக்காக, இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வரியைச் செலுத்தாத ஒரு குறித்துரைக்கப்பட்ட நிறுவனம் அல்லது வேறு ஆள் அத்தகைய நிறுவனத்தினால் அல்லது ஆளினால் செலுத்தப்படற் பாலதான வரித்தொகையை இச்சட்டம் தொடங்கும் தேதியை அடுத்துறும் மாதத்தின் இருபதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துமிடத்து, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நிறுவனம் அல்லது ஆள் முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடு களின் நியதிகளின்படி ஒரு தவணைதவறியவராகக் கருதப் படுதலாகாதென ஐயத்தைத் தவிர்ப்பதற்காகக் குறிப்பிடப் படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*